செ.வெ.எண்: 174 நாள்: 26.02.2020

**தமிழக அரசின் மூன்றாண்டு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.**

---

புதுக்கோட்டை சத்தியமூர்த்தி பூங்காவில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் மூன்றாண்டு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (26.02.2020) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்று மூன்றாண்டுகள் நிறைவு பெற்றுள்ளதையொட்டி தமிழக அரசின் சார்பில் மூன்றாண்டுகளில் செயல்படுத்திய திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இன்றைய தினம் புதுக்கோட்டை சத்தியமூர்த்தி பூங்காவில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் தமிழக அரசால் பொதுமக்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களான தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், 14 வகையான கல்வி உபகரணங்கள் வழங்கும் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி

ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம் வழங்கும் திட்டம், மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம், முதலமைச்சரின் குடிமராமத்து திட்டம், வேளாண் நலத்திட்ட உதவிகள் வழங்கும் திட்டம், அம்மா உணவகம் போன்ற பல்வேறு அரசின் நலத்திட்டங்கள் குறித்த புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளது.

இதே போன்று புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நீண்ட நாள் கனவுத்திட்டமான காவிரி-வைகை-குண்டாறு இணைப்பு திட்டம், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமணையில் உள்ள மருத்துவ வசதிகள், விராலிமலை முருகன் கோவில் மலைப்பாதை திட்டம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த புகைப்படங்களும் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது.

மேலும் இப்புகைப்படக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள புகைப்படங்கள் மூலம் தமிழக அரசின் திட்டங்கள் குறித்து பொது மக்கள் எளிதாக அறிந்து பயன் பெற வழிவகை ஏற்பட்டுள்ளது. இது போன்ற நடவடிக்கைகளின் மூலம் தமிழக அரசின் திட்டங்களை பொது மக்களிடையே கொண்டு சேர்க்கும் பாலமாக செய்தி மக்கள் தொடர்புத்துறை விளங்குகிறது. எனவே பொது மக்கள் அனைவரும் இப்புகைப்படக் கண்காட்சியினை கண்டு பயன்பெற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர். சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், வருவாய் கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், வட்டாட்சியர் பரணி, மத்திய தொலைத்தொடர்பு ஆலோசனைக்குழு உறுப்பினர் பாஸ்கர், மாவட்ட கூட்டுறவு அச்சக சங்கத்தலைவர் சேட், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**